# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ     அதிவிசேஷமானது

අංක 2074/44 - 2018 ජුනි මස 08 වැනි සිකුරාදා - 2018.06.08

*2074/44 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**ஆடைகள் உற்பத்தித் தொழில்**

ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச்சட்டத்தின் (136 – ஆம் அத்தியாயம் ) 28 – ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு அட்டவணையில் தரப்பட்டுள்ள முறையில், அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய முடிவுகளை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றது என இத்தால் அறிவிக்கின்றது.

மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபனையும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**சீ.என். விதானாச்சி**
தலைவர்,
ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05.
2018, யூன் 07.


1A - G27832 - 12 (2018/06)


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி 14688 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக மாற்றப்பட்டவையுமான முடிவுகள், அட்டவணையின் II ஆம் பகுதிக்காகப் பின்வரும் புதிய பகுதியினைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.

**பகுதி II**

ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்.

தொழிலாளர்கள் வகுப்பு

தரம் I (அ) வடிவமைப்போர், தையலாளர்கள், வடிவம் துளையிடுவோர், டிஸ்கெற் தயாரிப்போர்.

(ஆ) தலைவர்கள் அல்லது பகுதி மேற்பார்வையாளர்கள்.

தரம் II துணி வெட்டுவோர், கையால் துணி வெட்டுவோர், இயந்திர பழுதுபார்ப்போர், இறுதியாகச் சரிபார்பபோர்.

தரம் III சரிபார்ப்போர், தரம் பிரிப்போர், துணி அழுத்துவோர் (ஆண்கள்), சில்லறை வேலை செய்வோர் (பெண்கள்), பெயர் முத்திரையிடுவோர் (பெண்கள்), துணி அழுத்துவோர் (பெண்கள்), தையல் இயந்திரம் இயக்குவோர், மின் அழுத்தி இயக்குனர்கள், வழங்கும் தொழிலாளர்கள் (பெண்கள்), சித்திர வேலைப்பாடு இயந்திரத்தினால் /கையால் செய்வோர்

தரம் IV துணி விரிக்கும் ஆண்கள், துணி விரிக்கும் பெண்கள், பொதியிடுவோர், செலபீன் பைகளும், அட்டைப் பெட்டிகளும் தயாரிப்போர், தேர்ச்சியற்ற தொழிலாளர்கள், களஞ்சியத் தொழிலாளர்கள்.

தரம் V பயிற்சியாளர்களும், பயிலுநர்களும்.

பயிற்சியாளர்களும், பயிலுநர்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் தொழில் பயிற்சியாளர் அல்லது பயிலுநர் தொடர்பான பயிற்சிக்காலம் 156 வேலை நாட்களைக் கொண்டமைந்ததாகக் கருதப்பட வேண்டும்.

**சம்பள வீதங்கள்**

| ஊழிய ஆண்டு | தரம் I அ | தரம் I ஆ | தரம் II | தரம் III | தரம் IV | தரம் V |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1 ஆம் ஆண்டு | 14,650.00 | 14,100.00 | 12,700.00 | 12,600.00 | 12,000.00 | 7500.00 |
| 2 ஆம் ஆண்டு | 14,850.00 | 14,275.00 | 12,850.00 | 12,725.00 | 12,100.00 | |
| 3 ஆம் ஆண்டு | 15,050.00 | 14,450.00 | 13,000.00 | 12,850.00 | 12,200.00 | |
| 4 ஆம் ஆண்டு | 15,250.00 | 14,625.00 | 13,150.00 | 12,975.00 | 12,300.00 | |
| 5 ஆம் ஆண்டு | 15,450.00 | 14,800.00 | 13,300.00 | 13,100.00 | 12,400.00 | |

06 - 933

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.